# 02-12-2023 செய்தி

## பருவநிலை மாநாடு

**பற்றி**

- 1992ம் ஆண்டில் ஐ.நா சார்பில் நடத்தப்பட்ட 'பூமி மாநாட்டில்' பருவநிலை மாற்றத்தை தடுக்க உறுதியேற்கப்பட்டது.
- இதை தொடர்ந்து 1992ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் இம்மாநாடு நடத்தப்பட்டுவருகிறது.
- இதன், 28வது மாநாடு துபாயில் நடைபெற்று வருகிறது.

**COP-28ல் இந்தியா:**

- உலக மக்கள் தொகையில் 17% பேர் இந்தியாவில் வாழ்கின்றனர். எனினும் சர்வதேச கரியமில வாயு உமிழ்வில் இந்தியாவின் பங்கு வெறும் 4% மட்டுமே.

**பசுமைக் கடன் திட்டம்:**

- பாழடைந்த தரிசு நிலங்களில் மரம் வளர்ப்பதை ஊக்குவிக்கும் வகையிலான திட்டத்தை பிரதமர் அறிமுகம் செய்தார்.
- அதன்படி, பாழடைந்த தரிசு நிலங்களின் பட்டியல் ஒன்று உருவாக்கப்படும்.
- இந்த நிலங்களை தனி நபர்கள் மற்றும் நிறுவனங்கள் நடவு செய்ய பயன்படுத்தலாம்.
- இவ்வாறு சுற்றுச்சூழலுக்கு சாதகமான நடவடிக்கைகளை மேற்கொள்பவர்கள் பசுமைக் கடன்களை பெறுவார்கள்.
- மேலும், பருவநிலை மாநாட்டின் 33வது கூட்டத்தினை, 2028ல் இந்தியா நடத்த விருப்பம் தெரிவித்துள்ளது.

## ஏற்றுமதி கட்டுப்பாடுகள்

- உணவுப் பொருட்களின் எதிர்பாராத விலைவாசி உயர்வு அதிர்ச்சியை இந்தியா சந்திக்கக்கூடும் என்று ரிசர்வ் வங்கி ஆளுநர் கூறியுள்ளார்.

**இந்தியாவின் நிலை:**

- இந்தியா உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைந்துள்ளது.
- உலக அரிசி ஏற்றுமதியில் இந்தியா 40% பங்கு வகிக்கிறது.
- எனினும், உள்நாட்டு விநியோகம் குறைந்து, ஏற்றுமதி அதிகரித்து வருகிறது.
- உலகப் பட்டினி குறியீட்டில் 125 நாடுகளில் இந்தியா 111வது இடத்தில் உள்ளது.

**அரசின் முன்னெடுப்புகள்:**

- உள்நாட்டு விநியோகம் குறைந்து வருவதாலே இந்தியா கரிப் கல்யாண் அன்ன யோஜனா திட்டத்தை மேலும் 5 ஆண்டுகளுக்கு நீடித்துள்ளது.
- அரிசி ஏற்றுமதிக்கு சில கட்டுப்பாடுகளை இந்தியா விதித்துள்ளது.
- 1 டன் அரிசிக்கு குறைந்தபட்ச ஏற்றுமதி விலை 1200 டாலராகவும் பின்னர் அது 950 டாலராகவ்வும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**முடிவுரை:**

- உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்றிருக்கும் இந்தியா, ஏற்றுமதிக்கான கட்டுப்பாடுகள் மூலமும், முறையான விநியோகத்தின் மூலமும் உள்நாட்டு தேவைக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.